# பாதுகாப்பும் பக்குவமும் இல்லையெனில் உணவு நஞ்சாகலாம்! ஜனநாயகம் கேலிக்கூத்தாகலாம்!

"சட்டமன்றத்தில் விஜய் உரைகுறித்து கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் உணர்ச்சிமிகு கருத்து" "கண்ணியத்தோடு பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும்" என்ற இந்த தலைப்பில் கழகத் தலைவரின் சமூக வலைதளப் பக்கங்களில் வெளியிட்டுள்ள வீடியோப்பதிவில் ஜனநாயக அமைப்புமுறை என்பது யார் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாலும், உருக்குலைந்து விடக்கூடாது என்ற சமூக அக்கறையுடன் பதிவுசெய்துள்ள கருத்துக்களாகும். ஆம்! கழகத் தலைவரை ஒரு அரசியல் கட்சியின் தலைவர் என்ற நிலையிலிருந்து அவரை சமூக விஞ்ஞானியாகவும், (Social Scientist) அரசியல் மேதை யாகவும் (Statesman) இந்தக் கருத்துப்பதிவு உயர்த்தியுள்ளது என்பதுதான் சமூக அரசியல் ஆய்வாளர்களின் பொதுக்கருத்தாக உள்ளது.

**தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் தன்னுடைய சட்டமன்ற பதிலுரையில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தியாகத்தைப் பற்றியும், "மிசா" சிறை வாழ்க்கைப் பற்றியும் எதிர்மறையான - உண்மைக்கும் புறம்பான விமர்சனங்களை வைக்க வேண்டிய அவசியமோ தேவையோ அங்கு எழ வில்லை. இருப்பினும், முதலமைச்சர் ஜோசப்விஜய் அருவருப்பான உடல்மொழி யோடு இத்தகைய விமர்சனங்களை சட்டமன்றத்தில் அதுவும் தொடர்புடைய அவர் மன்றத்தில் இல்லாதபொழுது, மேலும் அவர் பதிலளிக்க வாய்ப்பில்லாத சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு எதிர்மறையான கருத்துக்களை முன்வைப் பதும் விமர்சிப்பதும் சட்டமன்ற மரபு களுக்கும், மாண்புகளுக்கும் முற்றிலும் முரண்பட்டதாகவே கருதமுடியும்.**

கழகத் தலைவர் தன்னுடைய சமூக வலைதளப் பக்கங்களில் மிகத்தெளிவாக 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி கலைக்கப்பட்டவுடன் காவல்துறை யினர் தன்னை "மிசா" சட்டத்தில் கைது செய்வதாகச் சொல்லிதான் கைதுசெய்து, சிட்டிபாபு உள்ளிட்ட மற்ற "மிசா" கைதி களோடு சேர்த்து சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டதாகத் தெரிவிக்கிறார். மேலும் கொடுமையானத் தாக்குதலிலிருந்து தன்னைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட சிட்டிபாபு, கடும் தாக்குதலுக்கு உள்ளாகி மருத்துவமனையில் மாண்டுபோனார் என்பதை யாரால் மறைக்க முடியும். இந்த நிகழ்வுகள் எல்லாம் மறுக்கமுடியாத பதிவுசெய்யப்பட்ட சாட்சியங்களாகும்.

இந்த உண்மைகளை மறைப்பதற்கு தமிழ்நாட்டின் முதல்வரும் அவரது கட்சியைச் சார்ந்தவர் களும் முயற்சிப்பது வரலாற்றை கொச்சைப் படுத்துகின்ற அநாகரீகச் செயலாகத்தான் மதிப்பீடு செய்யமுடியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஜனநாயகத்தின்மீது அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட இயக்கம். அதுமட்டுமல்ல, அவசரகால நிலையை (Declaration of Emergency) அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அமல்படுத்தப்பட்ட நேரத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதனை உடனே எதிர்த்து ஜனநாயக ஆட்சி முறையைக் காப்பாற்று வதற்காக கழகஆட்சியையே விலையாக கொடுத்தார் என்ற தியாக வரலாறு தி.மு.க-விற்கு உண்டு.

இதுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜனநாயக ஆட்சிமுறையில் தவறுகளை திருத்திக் கொள்ளும் மனப்பாங்கும், உண்மைகளை எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பக்குவமும் வேண்டும் என்பதை பல காலக்கட்டங்களில் வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். ("Correct me if I am erroneous; convince me if you have got solid reasons").

ஜனநாயகத்தில் மாற்றுக்கருத்துக்களை மதிக்க வேண்டும் என்பதை "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்ற உவமையின்மூலம் வலியுறுத்தினார்கள். ஜனநாயக நடைமுறைகளில் கடுமையான விமர்சனங்களையும், தாங்கிக்கொள்ளக்கூடிய மனப்பக்குவத்தை இயக்கத்திலுள்ள அனைவரும் குறிப்பாக இளைஞர்கள் பெற்றாக வேண்டும் என்பதற்காக "எதையும் தாங்கும் இதயம்" வேண்டுமென வலியுறுத்தினார். எத்தகைய இருண்ட சூழ்நிலையிலும் ஜனநாயக மாண்புகளுக்கும் - மரபுகளுக்கும் பாதிப்பு வந்துவிடக்கூடாது என்பதில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களும் மிகுந்த கவனத்துடன் அரசியல் வழித்தடங்களில் தங்களின் ஒவ்வொரு அடியும் எடுத்து வைத்துள்ளார்கள் என்பதை அவர்களின் கடந்தகால வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப்பார்த்தால் மிகத்தெளிவாகவே விளங்கும்! ஜனநாயகத்தின் இத்தகைய மாண்புகள் - மரபுகளின் அடிப்படையில்தான் கழகத்தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் சமீபத்திய தமிழக முதல்வரின் உரைகுறித்த வீடியோப் பதிவை வெளியிட்டுள்ளார்கள்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர் -
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்க்கமான திட்டமிட்ட கொள்கைதான், தமிழினத்தின் மொழி, நாகரிகம் ஆகிய பண்பாட்டுக் கூறுகளை பாதுகாக்கும் இயக்கமாகவும், அரசியலில் ஜனநாயகத்தையும் சமூகத்தில் ஆண் - பெண் சமத்துவத்தையும், அரசியலில் எந்த ஒரு மதச்சார்பில்லாமலும், "எல்லோருக்கும் எல்லாம்" என்ற சமதர்மக் கோட்பாட்டையும் கற்றறிந்த பகுத்தறிவு சமுதாயத்தை உருவாக்கும் இலக்கை நோக்கி தொடர்ந்து பயணிப்பதாகும்! முத்தமிழறிஞர் கலைஞரின் ஐம்பெரும் முழக்கங்கள் இந்தக் கொள்கை விளக்க முழக்கங்களாகவே தொடர்கிறது. அந்த ஐம்பெரும் முழக்கங்கள்தான்,

**1. அண்ணா வழியில் அயராது உழைப்போம்!**

**2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!**

**3. இந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம்!**

**4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!**

**5. மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி!**

இப்படி தமிழினத்தை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்காகவே திட்டமிட்டு உருவாக்கப்பட்ட இந்த இயக்கத்தை தமிழக சட்டமன்றத்திலும், பொதுவெளியிலும் தமிழக வெற்றிக் கழகத்தின் முதலமைச்சரும், அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் விமர்சிக்கும் முறை எந்த அளவிற்கு தரம் தாழ்ந்துள்ளது என்பதையும் சகித்துக் கொள்ளமுடியாத அளவிற்கு மக்கள் முகம் சுளிக்கும் நிலையை உருவாக்கி இருக்கிறது என்பதையும் வாக்களித்த மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**ஒரு அமைச்சர் பொதுவெளியில் பேரறிஞர் அண்ணா அறிவாலயத்தை வெள்ளை யடித்து வாடகைக்கு விட வேண்டிய நிலை தி.மு.க-விற்கு வரும் என்று பேசியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றின் வெளிப்பாட்டின் ஒரு பகுதிதான் அண்ணா அறிவாலயம். அண்ணா அறிவாலயம் என்பது பல்லாயிரக் கணக்கான ஏன்! லட்சக்கணக்கான தன்னலம் கருதாத, கொள்கை வேட்கை கொண்ட தியாகிகளின் உழைப்பால், வியர்வையால், தியாகத்தால், முத்த மிழறிஞர் கலைஞரால் வடிவமைக்கப்பட்ட நினைவாலயம்தான் அண்ணா அறிவாலய மாகும்! காலம் கடந்தாலும், கடல்கடந்து உலகப்பந்தில் பரவிக் கிடக்கின்ற தமிழினத்தின் பாதுகாப்பு அரண் - அகழி இந்த அறிவாலயம் என்பதை அந்த அரசியல் கத்துக்குட்டிகள் உணர வேண்டும். அண்ணா அறிவாலயத்திற்கு வெள்ளை யடித்து வாடகைக்கு விடச்சொன்ன அந்த நபர் மூளைசலவை செய்யப்பட்டு இந்துத்துவா சக்திகளின் கைக்கூலியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாடறியும். காலம் மாறும்! மக்கள் உண்மையை உணர்வார்கள்! அப்பொழுது வாக்களித்த அந்த மக்களே அறிவாலயத்தை வெள்ளையடிக்க சொன்ன அந்த நபரை சமூகப்புறக்கணிக்கச் செய்து விரட்டும் காலம் விரைவில் உருவாகும் என்பது உறுதி!**

எனவே, ஜனநாயக ஆட்சிமுறையில் வெற்றி தோல்வி என்பது மாறிமாறி வரக் கூடியதுதான். ஜனநாயகத்தில் ஒருமுறை கிடைக்கக்கூடிய வெற்றியை நிரந்தர மானதாக கருதி அரசியல் நடவடிக்கைகளில் சர்வாதிகாரப் பாதையை தேர்ந்தெடுத்தால், மக்கள் அதற்கான தண்டனையை நிச்சயம் வழங்குவார்கள் என்ற இந்த அடிப்படை உணர்வு கிஞ்சிற்றும் இல்லாமல், சட்ட மன்றத்திலும், பொதுவெளிகளும் முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களும், அவரது கட்சி சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் களும் கீழ்த்தரமான விமர்சனங்களில் ஈடுபடுவது என்பது ஜனநாயகத்தை கேலிக்குத்தாக்கிவிடும் (Democracy will become mockery). நம்மை உயிர்வாழ வைக்கும் உணவுகூட பக்குவமாக பாதுகாக்கப்படவில்லையெனில், நஞ்சாகி விடும். அதுபோன்றுதான் ஜனநாயக மாண்புகளும் - மரபுகளும் பாதுகாக்கப் படவில்லையெனில், ஜனநாயகம் கேலிக்கூத்தாகிவிடும்.

> **திசைமாறிச் செல்லும் தமிழக முதல்வர் ரோசப் விஜய் அவர்களின் ஆட்சிக்கு, கலங்கரை விளக்கமாக எங்கள் தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் வீடியோப் பதிவின் மூலம் சரியான திசை வழிகாட்டியிருகிறார். திருந்துங்கள் அல்லது திருத்தப்படுவீர்கள்.**

திசைமாறிச் செல்லும் தமிழக முதல்வர் ரோசப் விஜய் அவர்களின் ஆட்சிக்கு, கலங்கரை விளக்கமாக எங்கள் தலைவர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் வீடியோப்பதிவின் மூலம் சரியான திசை வழிகாட்டியிருகிறார். திருந்துங்கள் அல்லது திருத்தப்படுவீர்கள்.

### இந்திய தொழில் நிறுவனத்தின் முதலீட்டை

## "ஈர்க்கத்தான்"லண்டன் சென்றீர்களா? "வேறு ஈர்ப்பும்" இருக்கிறதா CM sir?

### சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

*நெல்லை.செப்.17-*

*இந்திய தொழில் நிறுவனத்தின் முதலீட்டை "ஈர்க்கத்தான்"லண்டன் சென்றீர்களா? "வேறு ஈர்ப்பும்" இருக்கிறதா CMsir ? என சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கேள்வி எழுப்பி உள்ளார்.*



*இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.*

*மறைந்த தலைவர் கலைஞர் அவர்கள் 2006-2011 வரை முதல்வராக இருந்த போது இந்தியாவை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வருகின்ற Samvardha Motherson International Limited (SAMIL) Part of the motherson Group மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனத்தை, அன்றைய தொழில்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளை அனுப்பி தொடர்பு கொண்டு புத்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்திட்டு 2010 ம் ஆண்டு அரசாணை (GO NO.631) மூலம் ஒரக்கடம், மறைமலைநகர், ஸ்ரீபெரும்புதூர், வடகால், பொந்தூர் ஊரப்பாக்கம் மற்றும் குறுவன்மேடு போன்ற இடங்களில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் இன்று வரை உற்பத்தி செய்து வருவதோடு பல ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுத்து வருவது உங்களுக்கு தெரியாதா CMsir?*

*மேற்படி இந்திய தொழில் நிறுவனத்தின் முதலீட்டை "ஈர்க்கத்தான்" லண்டன் சென்றீர்களா? "வேறு "ஈர்ப்பும்" இருக்கிறதா CMsir?*

*இவ்வாறு அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.*

### தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் :

## 31 பூத்களுக்கும் பூத் கமிட்டி அமைக்கப்படும்!

### புதுச்சேரி நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு!

*புதுச்சேரி, செப். 17-*

*தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆசி பெற்ற தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தல் தி.மு.க. வேட்பாளர் கு. சேது (எ) சேதுசெல்வம் அவர்களுக்கு தீவிர வாக்கு சேகரிக்கும் பணிக்காக தட்டாஞ்சாவடி தொகுதியில் உள்ள 31 பூத்களுக்கும் பூத் கமிட்டி அமைக்கப்பட்டு, பூத் கமிட்டி நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் நேற்று லப்போர்த் வீதியில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.*



*மாநில அமைப்பாளர் இரா. சிவா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மாநில துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, பொருளாளர் இரா. செந்தில்குமார் எம்.எல்.ஏ., ராஜ்பவன் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தி.மு.க. வேட்பாளர் கு. சேது (எ) சேது செல்வம் வரவேற்றுப் பேசினார்.*

*கூட்டத்தில் பூத் கமிட்டி நிர்வாகிகள் அவரவர் வாக்குச்சாவடியில் எவ்வாறு வாக்கு சேகரிப்பில் ஈடுபடுவது, தி.மு.க. வேட்பாளரின் வெற்றிக்கு எப்படி பிரச்சாரம் செய்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.*

*இந்த கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ.மூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம். லோகையன், டி.அருட்செல்வி, தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நித்திஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் வேலன், அமுதாகுமார், நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், செ.நடராஜன், கோ.தியாகராஜன், ப.வடிவேல், க.ர. ஆறுமுகம், மாணவர் அணி அமைப்பாளர் எஸ். பி.மணிமாறன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சுமதி, வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு, மகளிர் துணைத் தலைவர் பிரியதர்ஷினி மற்றும் பலர் கலந்துகொண்டனர்.*

### தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில்

## தந்தை பெரியார் 148வது பிறந்த நாள்!

### மாவட்டச் செயலாளர் கீதாஜீவன் அறிக்கை!

*தூத்துக்குடி, செப். 17-*

*தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்தநாள். மேலும் பேரறிஞர் அண்ணாவால் சென்னை ராபின்சன் பூங்காவில் 1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்ற கழகம் துவங்கப்பட்ட தினமும் இன்று. சமூக சீர்திருத்தத்திற்காக நூறாண்டு காலம் போராடியவர். மூடநம்பிக்கைகளை மக்களின் மனதிலிருந்து அப்புறப்படுத்தி பெண் விடுதலைக்காக போராடியவர். உதாரணமாக பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை உண்டென்று 1929 இல் நீதி கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியவர். அந்த தீர்மானத்தை 60 ஆண்டு கழித்து 1989 ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது சட்டமாக்கி தனது ஆசானுக்கு மரியாதை செய்தார். தந்தை பெரியாரின் கருத்துக்களை, சிந்தனைகளை சட்டங்களாக, திட்டங்களாக கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை மீட்டு எடுத்து தமிழ்நாட்டை வளர்ச்சி அடைய செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். சமூகநீதி காத்திட்ட திமுகழகத்தலைவர் மதிப்பிற்குரிய மு.க.ஸ்டாலின் அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் வழியிலே தமிழ்நாட்டை வளர்ச்சியை நோக்கி வழி நடத்தி சென்றார். தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்தது. தமிழ்மொழி வளர்ச்சி அடைய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.*

*தந்தை பெரியார் அவர்கள் மக்களின் நம்பிக்கையில் விஷ விதைகளை விதைத்து கொண்டிருந்த ஆதிக்க சக்திகளின் அனைத்து புரட்டுகளையும் வெளிப்படுத்தி அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர். அவர் மறைந்து 50 ஆண்டுகளை கடந்தும் இன்று வரை ஆதிக்க சக்திகள் அவர் விதைத்துச் சென்ற சமூக நீதிகளை மாற்ற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அப்பேர்ப்பட்ட தமிழகத்தின் தந்தை பகுத்தறிவு பகலவன் ஈவேரா அவர்களின் பிறந்த நாளில் அவரை வாழ்த்தி வணங்குகிறோம்.*




*இன்று (17ம் தேதி) தெற்கு காவல் நிலையம் முன்பு அமைந்துள்ள பகுத்தறிவு பகலவனின் திருவுருவ சிலைக்கு வடக்கு மாவட்ட கழக செயலாளராகிய எனது தலைமையில் மாலை அணிவித்து மரியாதையை செலுத்தப்படவுள்ளது. அந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட கழக கிளை நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகள் அனைத்திலும் தந்தை பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திடுமாறு கீதாஜீவன் கேட்டுக்கொண்டுள்ளார்.*

## விருதுநகர் மாவட்ட பிரதிநிதி பட்டம்புதூர் கு.லட்சுமணன் இல்ல மணவிழா வரவேற்பு!

### முன்னாள் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு – ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் வாழ்த்து!

*விருதுநகர், செப். 17-*

*விருதுநகர், பட்டம்புதூரைச் சேர்ந்த மாவட்ட பிரதிநிதி கு.லெட்சுமணன் இராமசுப்புலெட்சுமி தம்பதியரின் மகளான குருசக்தி பிரியா என்பவருக்கும் தேனி மாவட்டம் போடியைச் சேர்ந்த எஸ்.இரத்தின வேல்ராஜன் எஸ்.இந்திரா தம்பதியரின் மகனான சுந்தர் என்பவருக்கும்*



*விருதுநகர் இராம மூர்த்தி ரோட்டில் அமைந்துள்ள S.S.K.சரஸ்வதி கிராண்ட் திருமண மஹாலில் 20.09.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் 12.00 மணிக்குள் திருமண வரவேற்பு விழா நடைபெற உள்ளது.*

*இவர்களின் திருமண வரவேற்பு விழாவிற்கு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சுற்றம் சூழ அனைவரும் வந்து வாழ்த்த உள்ளனர். விருதுநகர் ஒன்றிய துணைச் செயலாளர் குருசாமி அனைவரையும் வரவேற்க உள்ளார்.*